# பெரியாழ்வார் திருமொழியில் அன்பு

117

**சௌ.பிருந்தா & முனைவர் சா.லிட்டில்பிளவர்,**
**தமிழ்த்துறை, அன்னை வேளாங்கண்ணி கல்லூரி,**
**தொலையாவட்டம், கன்னியாகுமரி மாவட்டம்,**

**ஆய்வுச்சுருக்கம்**

பன்னிரு ஆழ்வார்கள் திருமாலின் மீது பாடிய பக்திப் பாடல்களின் தொகுப்பிற்கு நாலாயிர திவ்யப்பிரபந்தம் என்று பெயர். இப்பிரபந்தத்தின் முதலாயிரம் தொகுப்பில் இடம் பெற்றுள்ளது பெரியாழ்வார் திருமொழி. பெரியாழ்வார் தனது திருமொழியில் கண்ணனைப் பற்றி மட்டும் கூறாமல் கண்ணன் மீதும், கண்ணன் பிறர் மீதும் அன்பு கொண்டிருந்ததைக் குறித்து கூறுகிறார். கண்ணன் மீது அவர் கொண்ட அன்பினையும் ஒரு சில இடங்களில் யசோதை மூலம் குறிப்பால் உணர்த்துகிறார். பெரியாழ்வார் குறிப்பிட்டுள்ள தாதியின் அன்பு, கண்ணன் – கோபியர் அன்பு, கண்ணன் அருச்சுனனின் அன்பு குறித்து இவ்வாய்வுக் கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.

**முன்னுரை**

இலக்கியம் என்பது மனித உணர்வின் வெளிப்பாடு. தமிழ் இலக்கியங்கள் மக்களின் வாழ்க்கைக்குத் தேவையான அறக் கருத்துக்கள், மக்களின் வாழ்வியல் நெறிகள், அவர்களின் பண்பாடு, நாகரிகம், உணர்வுகள் ஆகியவற்றை வெளிப்படுத்தும் வகையில் அமைகின்றன. இவற்றை பக்தி இலக்கியங்களும் வெளிப்படுத்துகின்றன. திருமாலை முழுமுதற் கடவுளாக வழிபடும் வைணவ சமயத்தின் இலக்கியமாக விளங்குவது ஆழ்வார்களது அமுதச் சுவைச் சொட்ட அமைந்துள்ள நாலாயிர திவ்யப்பிரபந்தம் ஆகும். இப்பிரபந்தத்தின் முதலாயிரம் தொகுப்பில் பெரியாழ்வார் திருமொழி இடம்பெற்றுள்ளது. இதில் பெரியாழ்வார் கூறியுள்ள அன்பு பற்றியக் கருத்துக்களை ஆய்வதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.

**அன்பு**

அன்பு என்பது உணர்ச்சி மற்றும் மனநிலை சார்ந்த பல்வேறு வகையான உணர்வுகளையும், அனுபவத்தையும் குறிக்கிறது. பக்தி, பாசம், நட்பு, காதல் என இவ்வுலகில் அன்பு பல பரிமாணங்களில் உள்ளது. அனைத்து உயிர்களிடமும் நாம் அன்பு காட்ட வேண்டும். பாரதியாரும் தனது பாப்பா பாட்டில்

" உயிர்க ளிடத்தில் அன்பு வேணும்"[1]

என்று கூறுகிறார். திருவள்ளுவரும் அன்பு குறித்து அன்புடமை என்னும் அதிகாரத்தில் கூறியுள்ளார். இதில் அன்பின் வழி ஒழுகுவாருடைய உடம்புகளே உயிர் நிலைத்து வாழும் உடம்புகளாகும். அன்பில்லாதவர்க்குரிய உடம்புகள் எலும்பைத் தோலால் போர்த்து மூடி வைத்துள்ள வெற்றுடம்புகள் என்று வள்ளுவர் கூறுகிறார். இதனை,

" அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு "[2]

என்று திருக்குறள் கூறுகிறது.

பெரியாழ்வாரின் அன்பு



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

கண்ணனைத் தனது குழந்தையாகப் பாவித்து பாடல்கள் பாடிய பெரியாழ்வார், கண்ணன் மீது கொண்ட அன்பினால் அவனுக்கு திருஷ்டிபடக்கூடாது என்று பல்லாண்டு பாடினார்.

அன்பின் மிகுதியால் தாயானவள் தன் பிள்ளைக்குத் பேரன்பு கொண்ட பெரியாழ்வார் கண்ணனுக்கு திருஷ்டி பட்டுவிடக்கூடாது என்று அவன் அவதரித்த திருவோணத் திருநாளில் பல்லான்டு பாடியுள்ளார். இதனை,

"விடுத்த திசை கருமந்திருத்தித் திருவோணத்
திருவிழாவில்
படுத்த பைந் நாகனைப் பள்ளி கொண்டானுக்குப்
பல்லாண்டு கூறுதுமே"[3]

என்ற வரிகளில் பெரியாழ்வார் விளக்குகின்றார்.

தாதியின் அன்பு

கண்ணன், தன் மீது அன்பு கொண்ட தாதியின் கூனை நிமிர்த்தினான்.

கண்ணனும், பலராமனும் கம்சனின் நகரத்திற்கு சென்றபோது, கம்சனின் தாதியான நைகவக்கிரை என்ற பெயர் கொண்ட கூனியை கண்டனர். அவளிடம் நறுமணம் கமழ்கின்ற சந்தனத்தைக் கண்ணன் கேட்டான். அவளும் கம்சனின் கோபத்திற்கு அஞ்சாமல் சந்தனத்தைப் பகவானின் மீது பூசினாள், கண்ணண் மீது அவள் காட்டிய அந்த அன்புக்குப் பரிசாக அவளது கூனை நிமிர்த்தி அழகும், இளமையும் கொண்டவளாக அவளை மாற்றினான் என்று பெரியாழ்வார் திருமொழி கூறுகிறது. இதனை,

"நாறிய சாந்தம் நமக்கிறை நல் கென்னத்
தேறி அவளும் திருவுடம்பிற் பூச
ஊறிய கூனினை உள்ளே ஒடுங்க அன்று
ஏற உருவினாய் ..................................................”[4]

என்ற வரிகள் விளக்குகின்றன.

கண்ணன் கோபியர் அன்பு

கண்ணன் கோபியர்களுடன் விளையாடும் விளையாட்டு அவர்கள் ஆடைகளை மறைத்து வைப்பது, தயிர், பால், வெண்ணெய் திருடி உண்பது ஆகிய அனைத்தும் தூய அன்பினை அடிப்படையாகக் கொண்டது.

உலகத்தையெல்லாம் காக்கும் வல்லமை கொண்ட கண்ணன் இடைச்சேரியில் சென்று தயிர், பால், வெண்ணெய் ஆகியவற்றைத் திருடி உண்கிறான். ஆயர்கள் அவனைக் கட்டிப்போட்டு அடிக்கிறார்கள். வலி தாங்காமல் கண்ணன் அழுவதனால் நாங்கள் முற்றிலுமாக அழிந்து கொண்டு இருக்கிறோம் என்று கோபியர்கள் சொல்கிறார்கள். இது கண்ணனிடம் கோபியர்கள் வைத்த அன்பை வெளிப்படுத்துகிறது. விவரிக்க முடியாத, மற்றவர்கள் அறியாத அன்பு கோபிகைகள் உடையது என்று பெரியாழ்வார் கூறுகிறார். இதனை,

"ஆய்ச்சியர் சேரி அளை தயிர் பாலுண்டு

பேர்த்தவர் கண்டு பிடிக்கப் பிடியுண்டு
வேய்த்தடந் தோளினார் வெண்ணெய் கோள்
மாட்டாது அங்கு
ஆப்புண்டிருந்தானால் இன்று முற்றும்
அடியுண்டு அழுதானால் இன்று முற்றும்"[5]

என்று பெரியாழ்வார் திருமொழி கூறுகின்றது. மேலும் யமுனா நதிக்கரையில் நீராடிய கோபியர்களின் பட்டாடைகளை வாரி எடுத்துக்கொண்டு மரத்தில் ஏறியதும் அன்பின் வயப்பட்டதாகும். இதனை,

"............................ எங்கள் பூம்பட்டு கொண்ட
இரட்டன் வந்து ....................................................."[6]

என்று பெரியாழ்வார் கூறுகிறார்.

கண்ணன் அருச்சுனன் அன்பு

பாண்டவர்களில் ஒருவனான அருச்சுனன் மீது கண்ணன் சிறுவயதிலேயே அன்பு கொண்டிருந்தான்.

நரநாராயணன் என்பது திருமால் எடுத்த இரட்டை அவதாரம் ஆகும். நரன் என்பது மனிதத் தன்மையும், நாராயணன் என்பது தெய்வத் தன்மையும் கொண்டதாகும். அருச்சுனன், கண்ணன் ஆகிய இருவரும் இந்த நரநாராயணர் வடிவங்களாக பூமியில் தோன்றினர். இதன் காரணமாக இளம் வயதிலிலேயே அருச்சுனன் மேல் அன்பு கொண்டு அருள் செய்தவன் கண்ணன் என்று பெரியாழ்வார். கூறுகிறார். இதனை,

"பாலப் பிராயத்தே பார்த்தற்கு அருள் செய்த
கோல பிரானுக்கு ................................................ "[7]

என்ற வரிகள் விளக்குகின்றன.

**முடிவுரை**

தன்னிடம் பக்தியும் அன்பும் துதிக்கின்றவர்களின் துயரினை தீர்க்கக்கூடியவன் கண்ணன். பெரியாழ்வார் கண்ணன் மீது வைத்த பேரன்பின் காரணமாக பகவானின் குழந்தைப் பருவத்து வீலைகளையெல்லாம் மானசீகமாகக் காணும் பேற்றினைப் பெற்றார். பகவானிடம் பரிபூரண அன்பு கொண்டவர்கள் தங்கள் குறைகள் நீங்கப் பெறுவார்கள் என்பதை தாதியின் அன்பு வெளிப்படுத்துகிறது. மேலும் கோபியர்கள் தன்னலமற்ற தூய அன்பினை கொண்டிருந்தனர். அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு உறுதிப்பொருட்களில் வீடுபேற்றினை அடையும் வழியினை பக்தி இலக்கியங்கள் கூறுகின்றன. அதனோடு உயிர்களிடத்தில் அன்பினையும் செலுத்த வேண்டும் என்று பெரியாழ்வார் திருமொழி கூறுவதை இக்கட்டுரை மூலம் அறியலாம்.

**அடிக்குறிப்பு**

1. பாப்பா பாட்டு (பாடல் எண்.16:1) (பக்க.எண்.238)
2. திருக்குறள் (அதிகாரம் 8: குறள் 80)

3. ஸ்ரீ நாலாயிர திவ்யப் பிரபந்தம் (பா.எ.9: 3,4)
4. மேலது (பா.எ.100:1-4)
5. மேலது (பா.எ.217:1-5)
6. மேலது (பா.எ.121: 3,4)
7. மேலது (பா.எ.177: 3,4)

**முதன்மை நூல்**

ஸ்ரீ நாலாயிர திவ்யப்பிரபந்தம் – தொகுதி 1, (மூலமும் உரையும்), பரமஹம்ச ஸ்ரீ பரத்வாஜ் ஸ்வாமிகள், பதிப்பு 2013,வனிதா பதிப்பகம், எண்.11, நானா தெரு, பாண்டிபஜார், தி.நகர், சென்னை 17.

துணைநூல் பட்டியல்

1. பாரதியார் கவிதைகள் , பத்தாம் பதிப்பு – 2018 ஆகஸ்ட், அருணா பப்ளிகேஷன்ஸ், 12, முதல் தெரு, வடக்கு ஜகன்னாத் தெரு, வில்லிவாக்கம், சென்னை – 600 049.

2. திருக்குறள் – மூலமும் எளிய தமிழில் உரையும் (பரிமேலழகர் உரையை அடியொற்றியது) வித்துவான் எம்.நாராயண வேலுப்பிள்ளை (உரை), பதிப்பு – 2012 ஏப்ரல், நர்மதா பதிப்பகம், 10, நானா தெரு, (தி.நகர் தலைமை
அஞ்சலகத்தை ஒட்டிய தெரு), பாண்டிபஜார், தியாகராய நகர், சென்னை - 600 017.

1.